என்று தரப்படுகின்ற வாய்ப்புக்களை அதிகப்படுத்தலாமே தவிர, மற்ற மாணவர்களுக்குக் கொடுக்கின்ற இடங்களிலே ஒதுக்குவது என்பது இப்போது இருக்கின்ற நிலையிலே இயலாத காரியம். ஏனென்றால், இதுபோலவே சி.பி.எஸ்.ஈ.-யிலே படித்த மாணவர்கள் இடத்தை ஒதுக்கச் சொல்கின்றார்கள். வேறு சில மாணவர்களுக்கு இப்படிக் கேட்டுக்கொண்டிருப்பதால், இன்றைய நிலையில் அது சாத்தியமில்லை.

B.Tech. (Textiles) Course.

* 120 Q.—Thiru S. MUTHUSAMY: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether any percentage of seats has been reserved for Diploma (Textiles) candidates, for admission into B.Tech. (Textiles) Course in Dr. Alagappa Chettiar College of Technology, Guindy; and

(*b*) if so, the number of students admitted during the academic years 1980–81 and 1981–82?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Apprentice Teachers.

* 121. Q.—THIRU P. R. THOMAS (on behalf of Thiru D. Santosham): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the services of the B.T. Teachers, who had entered service between 1st April 1970 and 3rd March 1973, and who were subsequently selected by the Tamil Nadu Public Service Commission were regularised from the date of their first entering into service; and

(*b*) if so, whether such benefit will be extended to the B.T. Teachers also, who entered service as Apprentice B.T. Teachers, during 1st October 1970 to 30th September 1972 and subsequently selected by the Tamil Nadu Public Service Commission during 1973?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) பட்டதாரி பணி பழகும் ஆசிரியர்களுக்கு படிகள் எதும் இல்லாத (Consolidated Monthsy Emoluments) மொத்த மாதச்சம்பளமாக ரூ. 17 மட்டுமே அளிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் பணி பழகும் ஆசிரியராகப்

பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தப்படத் தகுதி பெற்றவர்கள் அல்ல. ஆனால், அவர்கள் "பள்ளி ஆசிரியர்" பதவியில் காலியிடம் ஏற்பட்டதால் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு பின் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின் அவர்களின் பணி முறையானப் பதவியில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் வரன்முறை செய்யப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, 1—4—1970 முதல் 3—3—1973 வரை 'பி' பிரிவு பள்ளிகளில் மட்டும் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பணியில் சேர்ந்த நாளிலிருந்து பணி வரன்முறை அளிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் 3—3—1973-க்குப் பிறகு சிறப்புத் தேர்வாணைக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியில் வந்து சேர்ந்தவர்களுக்கு, அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து பணி வரன்முறை மறுக்கப் பட்டிருக்கின்றது. இதனால் இரு சாராருக்குமிடையே முரண்பாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே 1—4—1973-க்குப் பிறகு நியமிக்கப்பட்டுள்ள அத்தனை பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அவர்கள் முதலில் பணியில் சேர்ந்த நாளிலிருந்தே அவர்களுக்குப் பணி வரன்முறை அளிப்பதற்கு அரசு முன்வருமா? இந்த பணி பழகு ஆசிரியர்களுக்காக அவர் களுடைய பணிக் காலத்தைப் பொறுத்தவரையில், தேர்வுநிலை, சிறப்புநிலை போன்றவற்றிற்குக் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கு பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, கேள்வி யினுடைய முதல்பகுதி நேற்று கேட்கப்பட்ட ஒரு கேள்வியிலேயே கேட்கப் பட்டிருக்க வேண்டும். இதுகுறித்து இப்போது என்னிடத்தில் விவரமில்லை. இரண்டாவது பகுதியைப் பொறுத்து, அந்த ஆசிரியர்களுக்கு அப்படிச் செய்கின்ற எண்ணம் அரசிடம் இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே. தேர்வாணைக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டும், இதுவரை பணி வரன்முறை செய்யப் படாமலிருக்கின்ற ஆசிரியர்கள் நிலை வாரியாக எத்தனை பேர் என்ற குறிப்பு அமைச்சர் அவர்களிடத்திலே இருக்கிறதா? பல ஆண்டுகளாகப் பணி வரன்முறை செய்யப்படாமல் இருக்கக்கூடிய காரணங்கள் என்ன? அவர்கள் குறித்து அரசு எடுத்திருக்கக் கூடிய நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் காலியாகவுள்ள இடங்களிலே தற்காலிகமாக முழு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்

றார்கள். தேர்வாணைக் குழுவினரால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, முதலிலே எந்தத் தேதியிலிருந்து அவர்கள் பணியிலே முழு ஆசிரியராக சேர்க்கப்பட்டார்களோ அந்தத் தேதியிலிருந்து அவர்களுக்குப் பணி வரன் முறைப்படுத்தப்படுகிறது. மற்ற பணிப் பழகு ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், 175 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த அந்தக் காலத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, பணிப்பழகு பி.டி. ஆசிரியர்கள் 175 ரூபாய் வாங்கிய காலத்தையும் தேர்வு நிலைக்குக் கணக்கிடும்போது சேர்த்துக்கொள்ளலாம் அல்லவா? அவ்வாறு சேர்த்துக்கொள்வதற்கு அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அப்படிச் சேர்க்க ஆரம்பித்தால் வேறு பிரச்சினைகள் வருகின்றன. இரண்டாம் நிலை, முதல் நிலை ஆசிரியர்களின் பிரச்சினையும் இதுபோன்றதுதான். அப்புறம் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றிய அந்தக் காலத்தையும்கூட பி.டி. ஆசிரியர்களுக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டியது வரும். எல்லாவற்றையும் பரிசீலித்துத்தான் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று சொல்லியிருக்கிறோம்.

பாசனத்திற்குத் தண்ணீர் விடுதல்

***122 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா சார்பில்) :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்திற்குட்பட்ட, உடுமலை வட்டத்திலுள்ள ஏழுகுளம் (Seven Tanks) ஆயக்கட்டிற்குட்பட்ட நிலங்களின் பாசனத்திற்கு, 1983 ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் இறுதிவரை தண்ணீர் விடப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) உண்மையல்ல.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே. பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத்திட்டம் பெரியார், கோவை மாவட்டங்களில் வேறு ஏதேனும் புதிய பகுதிகளுக்குப் பயனடையச் செய்கின்ற யோசனை அரசுக்கு உண்டா?